செ.வெ.எண்.16 நாள்:09.05.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மண்டல கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக சாரல் அரங்கில மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் திருநெல்வேலி மண்டல கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் இன்று (09.05.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் 80 பயனாளிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பிலான கூட்டுறவு கடனுதவிகளை வழங்கினார்.

கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் தற்போதய நிலை குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 6240 கூட்டுறவுச் சங்கங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு ATM கார்டு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பல நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகள் கூட்டுறவுத்துறையின் மூலம் 57 லட்சம் விவசாயிகளுக்கு சுமார் ரூ.27,000 கோடி பயிற் கடன் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளின் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்திடவும், வருமானத்தை மூன்று மடங்காக உயர்த்திடவும் பல திட்டங்களை செயல்படுத்தினார்கள் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் உற்பத்தி பொருட்களை பாதுகாத்திட 6 ஆண்டுகளில் 3709 சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 5.10 லட்சம் டன் விவசாய பொருட்களை பாதுகாக்க முடியும் ஏற்கனவே உள்ள கிடங்குடன் சேர்த்து தற்போது 8845 கிடங்குகள் உள்ளது. இதன் மூலம் 13 லட்சம் டன் விவசாய பொருட்களை சேமிக்க முடியும் மேலும் உற்பத்தி பொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது. இதுவரை தானிய ஈட்டுக் கடனாக ரூ.1629 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 111 அம்மா மருந்தகங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும் கூட்டுறவுத்துறையின் மூலம் 184 மருந்தகங்கள் செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி அம்மா மருந்தகத்தில் ஒரு நாளைக்கு ரூ.5.00 லட்சத்திற்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறது.

இதுவரை ரூ.35.00 கோடிக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இம் மருந்தகத்தில் 1500 நபர்கள் வாடிக்கையாளர்களாக உள்ளனர். திருநெல்வேலி அம்மா மருந்தகத்தில் சுமார் 12,000 உயிர்காக்கும் மருந்துகள் உள்ளது. ரூ.1.40 கோடி மதிப்பிலான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி அம்மா மருந்தகத்திற்க்கு மாநில அளவில் இரண்டு முறை பரிசு வழங்கப்பட்டுள்ளது. அம்மா மருந்தகங்கள் கூடுதலாக திறக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத்துறையின் மூலம் தமிழகத்தில் 79 பண்ணை பசுமை கடைகளில் தரமான காய்கறிகள் நியாயமான விலையில் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் அடிப்படை தேவை பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்திட பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். அரிசி விலையை கட்டுப்படுத்திட ஒரு கிலோ அரிசி ரூ 20 க்கு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள். மத்திய அரசு மானியம் வழங்காத நிலையிலும் பாமாயில், உளுந்து, துவரம் பருப்பு உள்ளிட்டவைகளுக்கு மானிய விலையில் வழங்கிட உத்தரவிட்டார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வறட்சியான சூல்நிலையிலும் 1.90 லட்சம் குடும்ப அட்டை தாரர்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்கி வருகிறது. அம்மா சிமெண்ட் மூடை ரூ.190 க்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் தலைமையில் அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்கான திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகம் விஷன் 2023 திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதன் மூலம் 2023 ம் ஆண்டில் தமிழகம் தென் ஆசிய நாட்டிலேயே முதன்மை மாநிலமாக மாற்றி அம்மா அவர்களின் கனவை நிறைவேற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட்டு வருகிறது. என தெரிவித்தார்.

தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110 ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள், கூட்டுறவு சங்கங்களுக்கு புதிய கட்டிடம் கட்டுதல், பொது சேவை மையங்கள் அமைத்தல், மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் தானியங்கி பணம் பட்டுவாடா இயந்திரம் நிறுவுதல், மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல், புதிய உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல், கூட்டுறவு கடன் சங்கங்களை கணினிமயமாக்குதல், உள்ளிட்ட பல்வேறு பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களும் திருநெல்வேலி அம்மா மருந்தகம் மற்றும் சன்னியாசி கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையினை ஆய்வு செய்தார்கள். மேலும் நியாயவிலை கடையில் இருந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.ஞானசேகரன்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், திருமதி.விஜிலாசத்யானந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஆர்.முருகையாபாண்டியன், திரு.ஐ.எஸ்.இன்பத்துரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.ராஜேந்திரன், தென்னக ரயில்வே ஆலோசனை குழு உறுப்பினர் திரு.பாப்புலர் முத்தையா, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், திருநெல்வேலி தூத்துக்குடி நெசவாளர் சங்கத்தலைவர் திரு.ஆறுமுகம், பேரங்காடி தலைவர் திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, அக்ரோ தலைவர் திரு.வெங்கடேசன், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.சுதா பரமசிவம், திரு.சண்முக சுந்தரம், திரு.தச்சை கணேச ராஜா மற்றும் கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.